**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 பொதுத்துறை கணக்கீட்டு நிறியமங்களுடன் இணங்கியிருக்காமை

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்கியிருக்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 மற்றும் 10 இற்கு முரணாக காசு அடிப்படையில் வருமானங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 2,247,500 தொகையான பெற வேண்டிய கற்கைநெறி வருமானம் நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது கணக்கீட்டுக் கொள்கை குறிப்பிடப்படுகின்றது. கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க செலவுகளை அட்டுறு அடிப்படையின் கீழ் காட்டுவதற்கும் வருமானங்களை காசு அடிப்படையில் இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களைச் சார்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுதியை ஒரே தடவையில் மீள் மதிப்புச் செய்ய வேண்டிய போதிலும் அதற்கு முரணாக நிறுவனத்திற்குச் சொந்தமான 09 மோட்டார் வாகனங்களுக்கு மத்தியில் ஒரு மோட்டார் வாகனங்களுக்கு மத்தியில் ஒரு மோட்டார் வாகனம் மாத்திரம் அவ்வாகனத்தை காப்புறுதி செய்யும் போது பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 4,300,000 மதிப்பீட்டின் அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் மோட்டார் வாகனங்களின் விளைதிறனான ஆயுட்காலம் தெடர்பாக மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும் தற்பொழுதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 31,565,440 தொகையான 5 மோட்டார் வாகனங்களை மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இம் மோட்டார் வாகனங்களின் புத்தகப் பெறுமதி ரூபா 9.5 மில்லியனாகும். எனினும் சந்தைப் பெறுமதி ரூபா 4.3 மில்லியன் மாத்திரமாகும். எனவே வருடாந்தம் செலுத்தப்பட்ட ரூபா 237,000 அளவான பணமானது காப்புறுதி தவணைப் பணம் ரூபா 131,000 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறுவனத்திற்கு ஏற்பட்ட பொருளாதார நட்டம் ரூபா 106,000 ஆகும். ஏனைய மோட்டார் வாகனங்களையும் இந்த ஆண்டின் போது மீள் மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தில் காணப்பட்ட அனைத்து மோட்டர் வாகனங்களினதும் விளைதிறனான ஆயுட்காலத்தை மீள்மதிப்புச் செய்து புதிய விளைதிறனான ஆயுட் காலத்திற்கு இணங்க பெறுமானத் தேய்வு செய்வதனை கணக்குகளில் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்கள் கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. அதன் காரணமாக ரூபா 31,565,440 தொகையான முழுமையாக பெறுமாத்தேய்வு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. | |

**1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கணனி மற்றும் மென்பொருட்களின் விளைதிறனான ஆயுட்காலம் 4 ஆண்டுகளாக மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கிணங்க பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அக்கொள்கைக்கு முரணாக 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,688,033 கிரயமான கணனி மென்பொருளின் விளைதிறனான ஆயுட்காலத்தை முறையாக மதிப்பீடு செய்யாது 16 ஆண்டுகளாக மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கிணங்க 6.25 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | இதன் போது 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,688,033 கிரயமான கணனி மென்பொருட்கள் 3 ஆண்டுகள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதன் பின்னர் விளைதிறனான ஆயுட் காலத்தை மேலும் 4 ஆண்டுகள் என மீண்டும் மீள் மதிப்புச் செய்யப்பட்டது. அதற்கிணங்க சொத்துக்களில் மேலும் தேறிய கிரயம் 25% இன் கீழ் பெறுமாத்தேய்வு செய்யப்பட்டு கணக்குகளிலும் கணக்கீட்டு பதிவுகளிலும் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வறுமை ஒழிப்புச் செயற்திட்டத்திற்காக நிறுவனம் நடாத்திய கற்கை நெறிகளுக்காக ரூபா 3,577,394 தொகை தேசிய இரத்தினக்கல் மற்றும் | வறுமை ஒழிப்புச் செயற்திட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய ரூபா 3,577,304 பணம் கிடைக்க வேண்டிய பணமாக நிறுவனத்தின் ஏடுகளில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் | பெற வேண்டியது என்பதாக உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதியை கணக்குகளில் காட்டுவதற்கு |

| | | |
|---|---|---|
| ஆபரணங்கள் அதிகார சபையிடமிருந்து கிடைக்க வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தது. அத்தொகையானது அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியாகக் காட்டப்பட்டிருக்காததுடன் இப் பெறவேண்டிய மீதியை அறவீடு செய்தல் சச்சரவுத்தன்மையாக இருந்தது. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையின் ஏடுகளில் செலுத்த வேண்டிய பணமாக பதியப்படுதலானது அந்த அதிகார சபையின் பொறுப்பாகும். இது தொடர்பாக பல தடவைகள் அதிகார சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த 77 மாணவர்களுக்குரிய ரூபா 174,868 தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் 3 ஆண்டுகள் கடந்திருந்தும் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இம் மாணவர்களுக்கு மத்தியில் 20 மாணவர்களின் கற்கை நெறிகள் இன்னும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. ஏனைய 46 மாணவர்களுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தி 03 மாத காலம் வழங்கப்பட்டுள்ளது. | வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2015 யூன் 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 | செயல் நிதித்த உப கட்டு நிதியானது உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 26 சந்தர்ப்பங்களின் போது ரூபா 435,370 கூட்டுமொத்தமான முற்பணங்கள் 20 நாட்களிலிருந்து 62 நாட்கள் வரையான காலம் தாமதித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | 14 நாட்கள் காலத்துள் அல்லது செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் விலைப் பட்டியல்களையும் முற்பணத் தொகையையும் மீளளிப்புச் செய்ய வேண்டுமென பதவியணியினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதற்குப் பின்னர் இவ்வாறான தவறுகள் இடம் பெறாமைக்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினைத் தயாரித்து உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2019 ஆம் ஆண்டிற்கான வரைவு செயலாற்றல் திட்டத்திற்காக 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் 2019 சனவரியிலிருந்து ஏப்ரல் வரை இடைக்கால அங்கீகரித்த கணக்கின் மூலம் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2019 மே 01 ஆந் திகதியிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு மே மாதம் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2003 யூன் 30 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளை உள்ளடக்கிய ஆண்டறிக்கையானது கணக்காய்வு திகதியான 2020 மே 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்துடன் 2019 யூலை 30 ஆந் திகதி அப்போது எங்களின் நிறுவனத்திற்குரியதான மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,111,440 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 2,787,629 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 7,899,069 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. ஆளணி வேதனச் செலவுகள் ரூபா 4,974,364 ஆலும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவுகள் ரூபா 4,622,824 ஆலும் அதிகரித்தல் இவ் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னை 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது நிறுவனம் 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மிகைகளை அறிவித்திருந்த போதிலும் 2015, 2017 ஆம் ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையற்ற

சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினைக் கருத்திற்கு எடுத்துக் கொண்ட போது அவை 100 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 76,269,673 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2009 இலிருந்து 2014 வரையான காலத்தில் நிறுவனத்தின் 18 ஊழியர்களுக்கு சம்பள ஏற்றங்களும் படிகளுமாக ரூபா 2,580,281 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் நடைமுறையில் சேவையில் ஈடுபட்டுள்ள 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது நிதிப்பிரமாணம் 119 இற்கு முரணாக ஓய்வுபெறும் வரை ரூபா 50 இற்கும் ரூபா 1,942 இற்கும் இடைப்பட்ட மாதாந்த மாதாந்த தவணைப்பணங்களாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 1,481,781 ஆகும். தற்பொழுது சேவையில் ஈடுபட்டிருக்காத 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 227,652 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அப்போது நிறுவனத்தில் இருந்த தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை வழங்கிய அங்கீகாரத்தின் பிரகாரம் அச் சம்பள ஏற்றங்கள் வழங்குதல் இடம்பெற்றிருந்தது. 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட இச் சம்பள ஏற்றங்களை வழங்குதல் 2014 ஆம் ஆண்டுவரை எதுவித கணக்காய்வு ஐயவினாவிற்கும் உட்பட்டிருக்கவில்லை. அப்போது சேவையாற்றிய பிரதிப் பணிப்பாளரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 201,309 பணம் செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த சம்பளத்தை அதிகரித்துச் செலுத்துதல் இந்த உத்தியோகத்தர்களின் தவறு அல்லாததனால் அப்போதைய தலைவரின் ஆலோசனையின் பேரில் தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள ஊழியர்களிடமிருந்து ஓய்வு பெறும் வரை தவணை அடிப்படையில் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாகச் செலுத்திய சம்பளத்தை ஒரே தடவையில் அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது முற்பணங்கள் வழங்கியதன் காரணமாக 11 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 101,900 முற்பணங்கள் முழுமையாக பணமாகவும் 35 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 550,700 முற்பணங்களில் 40 சதவீதத்திற்கு | பல்வேறு விசேட விடயங்களின் காரணமாக முற்பணங்கள் முழுமையாகவும் பணமாகவும் மீளச்செலுத்தி தீர்த்து வைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு முற்பணங்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

மேற்பட்ட அளவானவை செலவு செய்யப்படாது மீளச்செலுத்தி தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆராய்ச்சிப் பிரிவின் 5 செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,400,000 தொகையில் ரூபா 646,000 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் நிதி செயலாற்றல் சதவீதமானது 7 சதவீதத்திலிருந்து 35 சதவீத வரையுமாகும். நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவின் 2 செயற்பாடுகளுக்காக திட்டத்தை மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்துடன் அம் மிகைத்தல் சதவீதமானது 126 சதவீதம் மற்றும் 138 சதவீதமாகும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் ரூபா 9.72 மில்லியனாகும். செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 7.23 மில்லியனாகும். சதவீதமாக 74.4 சதவீதமாகும் மூலதன நிதி ஏற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் ரூபா 4.565 மில்லியன் பணத்தை நிறுவனத்திற்கு திறைசேரி வழங்கியிருக்கவில்லை. மனித வளங்கள் பிரிவின் செயற்பாடுகளான அலுவலக உபகரணங்கள் மற்றும் ஆராய்ச்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக நிதி ஏற்பாட்டினை மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்தும் ஒட்டு மொத்தமான மூலதனச் செலவுகள் மதிப்பீட்டிற்குள் செலவு முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டமானது நடைமுறைச் சாத்தியமாக இருக்க வேண்டியதுடன் அதன் இலக்கினை அடைந்து கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கையில் இரத்தினக்கள் சுரங்கங்களைத் தோண்டுதல் மற்றும் ஆய்வு செய்தல் செயற்திட்டம் (2008 – 2031) சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) செயற்திட்டத்திற்காக நிறுவனத்தில் இருக்கும் பதவியணியினர்களுக்கு மேலதிகமாக 22 ஊழியர்கள் மற்றும் ஒரு ஆலோசகரினை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போதும் அதற்காக ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படாது 5 | செயற்திட்ட பிரேரணையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா 15.3 மில்லியனாக இருந்தும் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 04 மில்லியன் மட்டுப்படுத்தப்பட்ட பணத்துக்குள் ஆலோசகரின் சம்பளத்தை செலுத்துவதற்காக நிதி ஏற்பாடு இல்லாததன் அடிப்படையில் பதவிக்காக ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கு | உரிய பதவியனினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டதாரிப் பயிலுனர்களைச் சேர்த்துக்கொண்டு செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. | முடியாதிருந்தது. நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொண்டததன் பின்னர் மிக அண்மையில் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய பதவிகளுக்காக வழங்கப்படுகின்ற மாதாந்தப் படிகளானது அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற் திட்டங்களில் காணப்டுகின்ற சம்பளங்கள் / படிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அப்படிகளை அதிகரித்தல் சம்பந்தமாக இணங்கியிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டிற்காக திறைசேரி நிதி ஏற்பாடு கிடைத்த பின்னர் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பல்கலைக்கழகத்தினால் பட்டதாரி விண்ணப்பதாரர்களை பயிற்றுவிப்பதற்காக மேற்கொண்ட வேண்டுதல்கள் மற்றும் பட்டதாரிகளை தொழில் சார்ந்த பயிற்சிகளுக்கு ஈடுபடுத்துவதனூடாக ஆராய்ச்சிக்காக பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ii) | முதலாம் கட்டமான 2017 – 2021 காலப்பகுதிக்குள் 5 மாவட்டங்களின் 50 பிரதேச செயலகப் பிரிவுகளில் இரத்தினக்கல் சுரங்கங்களைத் தோண்டிப் பார்த்து படங்களை உருவாக்கி இறுதி அறிக்கையினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் 06 பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக படங்கள் உருவாக்கப்பட்டு இறுதி அறிக்கை வழங்கப்படடிருந்தது. 40 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய அகழ்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆரம்பிக்கப்பட்ட தவலம, | திறைசேரி நிதி ஏற்பாடுகளில் தட்டுப்பாடு மற்றும் தேவையான அங்கீகாரங்களின் தாமதத்தின் அடிப்படையில் பொருத்தமான நபர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாதிருந்தது. இதன் காரணமாக 2017 – 2019 காலப்பகுதியில் நிறுவனத்தில் இருந்த நிரந்தர பதவியனியினர்களில் ஒரு சிரேஸ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் 5 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் 3 வெளிக்கள உதவியாளர்களின் உதவியுடன் மாத்திரம் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த வேண்டியியிருந்ததனால் | எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மெல்மடுல்ல அகுரஸ்ஸ, எஹலியகொட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக இரத்தினக்கல் உள்ளமைக்கான சாத்திய படங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.<br><br>தற்பொழுது 10 பிரிவுகளின் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இரத்தினக்கல் உள்ளமைக்கான சாத்திய படங்கள் 8 உருவாக்கப்பட்டுள்ளன. தேசிய பொருளாதாரத்திற்கு உயர்ந்த மதிப்பினை வழங்குவதற்காக பற்றாக்குறையான மற்றும் மட்டுப்பாடான மனித வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. | |
| (iii) | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையை இச் செயற்திட்டத்திற்கு ஒருங்கிணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் செயற்திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட இரத்தினக்கல் உள்ளது எனக் கருதப்படுகின்ற 05 பிரதேசங்களில் முன்னோடி செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு தேசிய இரத்தினக்கல் மற்றம் ஆபரண அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தினூடாக இனங்காணப்பட்ட இரத்தினக்கல் காணிகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கான முன்னோடிச் செயற்திட்டத்திற்காக பதுளை மாவட்டத்தில் ஹல்தமுல்ல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 5 காணிகள் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிலைய அவதானிப்புக்காக வெளிக்களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முன்னோடி செயற்திட்டத்திற்குரிய சுரங்கங்களைத் தோண்டுதல் அதிகார சபையின் செலவில் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்ரக எடுத்தல் வேண்டும். |
| (இ) | இரத்தினக்கற்களை பட்டைத்தீட்டுவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 10,977,344 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மின்சார அடுப்பு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டு வருமானத்தை உழைக்கும் நிலைமைக்கு கொண்டு வருவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,384,957 செலவு | இது 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் இரத்தினபுரி பிராந்திய நிலையத்தில் அடுப்புக்குத் தேவையான மின்சார வழங்கல் இல்லாததனால் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்திக் கொள்வதற்கு முடியாது காணப்பட்டது. சுற்றாடல் அமைச்சு | சொத்துக்களை விளைதிறனாகப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. அடுப்புக்கள் நிறுவப்பட்டிருந்த தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் மின்சாரம் பாயும் தடத்தை தயாரிப்பதற்காக நிறுவனம் செலவு செய்த ரூபா 1,402,222 தொகை ஆண்டின் இறுதி வரை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் இரத்தினபுரி தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை வளவில் வழங்கப்பட்ட இடவசதியில் அந்த அடுப்பை நிறுவுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 பெப்ரவரி 11 ஆந் திகதியிலிருந்து அந்த அடுப்பு மக்கள் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதன் தன் காரணமாக அடுப்பிலிருந்து எதிர்பார்த்த சேவையை துறைக்கு வழங்கக் கூடியதாக இருந்தது. | |
| (ஈ) | தேசிய விஞ்ஞான மன்றத்தின் ரூபா 10,481,088 நிதி உதவியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்ட இரத்தினக்கற்களின் நிறத்தையும் தெளிவுத் தன்மையும் அதிகரிப்பதற்கான மிகவும் செயற்திறனான மற்றும் வினைத்திறனான முறைமையை அறிமுகப்படுத்தும் செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளில் மீளாய்வாண்டில் ரூபா 3,132,048 தொகை அதாவது 30 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 ஏப்ரல் 21 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,130,000 தொகையான Pressure Vessel இயந்திரம் மீளாய்வாண்டின் போதும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய Oiling, Impregnation, Waxing Diffusion, Glass filling, Bleaching ஆகிய செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயற்திட்டத்திற்காக ஒரு தொழில்நுட்ப உதவியாளரும் ஒரு வேலையாளும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படாது ஆராய்ச்சி மாணவர் ஒருவர் மாத்திரம் | இச் செயற்திட்டத்தின் செயற்திட்ட ஆண்டு முடிவடைவதானது திசெம்பர் 31 அல்லாது ஏப்ரல் 21 ஆந் திகதியாகும். செயற்திட்டத்திற்காக இரசாயனப் பொருட்கள், Pressure Vessel என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் வேலையாளர் பதவிகளுக்காகப் ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தும் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட படிகள் பொருத்தமற்றதாக இருந்ததனால் அந்த ஊழியர்கள் சேவையை விட்டுச் சென்றிருந்ததுடன் புதிய ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் முடியாதிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிககைகளை நிறுவனத்தில் இருந்த ஊழியர்களை ஈடுபடுத்தி மேலதிகக் கொடுப்பனவு இன்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

| | | |
|---|---|---|
| (உ) நிறுவனத்தினால் ஆண்டில் 30 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்ட கற்கை நெறி நடாத்தப்பட்டிருக்கவில்லை. 6 கற்கை நெறிகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட 492 மாணவர்கள் எண்ணிக்கையை விட மிகவும் குறைந்தவர்களே சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் சதவீதம் 42 சதவீத்திலிருந்து 68 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டில் உருக்கி வார்த்தல் மற்றும் இலத்திரனியல் ரீதியாக உலோக வேலை செய்தல் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அவசரமாக கட்டிடத்தில் மின்சார வழங்கல் சம்பந்தமாக இடம்பெற்ற சிக்கலின் அடிப்படையில் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. ஆபரணங்களுக்கு கற்கள் பதிக்கும் கற்கை நெறியை 2019 மே 30 ஆந் திகதி ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காமையும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாகவும் கற்கை நெறியை தற்காலிகமாக கைவிட நேரிட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டம் நடைமுறைச் சாத்தியமாக இருக்க வேண்டியதுடன் அதன் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) நிறுவனத்திற்குச் சொந்தமான 2 வாகனங்கள் 4 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகள் காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | PB 7848 இலக்க வாகனத்தை 2018 ஆம் ஆண்டின் போது விற்றுத் தீர்ப்பதற்கு விலை மனுக்கள் கோரிய போது மதிப்பீட்டுப் பெறுமதியை விடக் குறைவாக விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக விற்றுத் தீர்ப்பதற்கான குழுவின் மூலம் நிராகரிக்கப்பட்டது. மீண்டும் விற்றுத் தீர்ப்பதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அங்கீகாரம் பெற்றுக் கொண்டதன் பின்னர் விற்றுத் தீர்த்தல் நடடிக்கை மேற்கொள்ளப்படும் QW 1185 ஆம் இலக்க முச்சக்கர வண்டியை திருத்தம் செய்து நிறுவனத்தின் குறுந்தூரப் | சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

பயனங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகைத் திட்டமானது ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் பணிப்பாளர்கள் சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டமானது 2019 மே 3 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தினால் பெறுகைத் திட்டமானது விபரமாகத் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான வரைவு பெறுகைத் திட்டமானது வரைவு பாதீட்டு மதிப்பீட்டுடன் 2018 ஆகஸ்ட் 09 ஆந் திதகி பணிப்பாளர்கள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் 2019 ஆம் ஆண்டின் மே 01 ஆந் திகதியிலிருந்து பாதீடு அங்கீகரிக்கப்பட்டது என தயவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட பெறுகைத் திட்டமானது பணிப்பாளர்கள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் பெறகைத் திட்டம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் இரத்தினக்கல் மாதிரிகளைக் கொள்வனவு செய்வதற்கு பாதீட்டின் மூலம் ரூபா 200,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அதற்குரிய கொள்வனவுகள் இடம் பெற்றிருக்காததுடன் ரூபா 1,100,000 தொகையான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 1,520,813 தொகையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | அலுவலக உபகரணங்கள் மற்றும் இரத்தினக்கல் மாதிரிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் அலுவலக உபகரணங்களுக்காக ரூபா 1,520,000 பணம் செலவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க சதவீதம் 138% ஆகும். 2019 ஆம் ஆண்டிற்காக இரத்தினக்கல் மாதிரிகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்னளைப் பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் எதுவித வழங்குனரும் பதிவு செய்யப்படாததன் அடிப்படையில் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | திட்டங்களின் பிரகாரம் கொள்வனவு செய்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் அங்கீகரித்த 136 பதவியணியினர்களில் 56 பதவியணியினர்கள் அதாவது 41 சதவீதமான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 9 ஆண்டுகள் வெற்றிடமாக இருந்த பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவிக்காக ஆட் சேர்ப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடமாகக் காணப்பட்ட 56 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு வேண்டுதல் விடுவிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் தகமைகளை பூரணப்படுத்திய விண்ணப்பதாரர் முன்வந்திருக்காதனால் ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |